# கிரீஸ் பிரதமரின் இந்திய அரசுமுறை பயணம் (பிப்ரவரி 21-22, 2024)

பிப்ரவரி 17, 2024

1. பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அழைப்பின் பேரில், ஹெலனிக் குடியரசின் (கிரீஸ்) பிரதமர் திரு. கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் அவர்கள் 2024 பிப்ரவரி 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். அவருடன் மூத்த அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரமுள்ள வர்த்தக பிரதிநிதிகளும் வருகை தருகிறார்கள். புதுதில்லியில் நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான 9வது ரைசினா உரையாடலில் கிரீஸ் பிரதமர் திரு. மிட்சோடாகிஸ் சிறப்பு விருந்தினராகவும், முக்கிய பேச்சாளராகவும் கலந்து கொள்கிறார். இறுதியாக அவர் ஏதென்ஸுக்குத் திரும்புவதற்கு முன்னர் மும்பைக்கும் வருகை தருகிறார்.

2. ராஷ்டிரபதி பவனின் முன்புறத்தில் பிரதமர் திரு. மிட்சோடாகிஸ் அவர்களுக்கு சம்பிரதாய முறைப்படி வரவேற்பு அளிக்கப்படும். அதன்பின் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் கிரீஸ் பிரதமர் திரு. மிட்சோடாகிஸ் ஆகியோர் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார்கள். மேலும் வருகை தரும் உயரதிகாரிகளை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு பாரத பிரதமர் மோடி அவர்கள் மதிய உணவு விருந்து அளிக்க உள்ளார்.

3. ஆகஸ்ட் 2023 ஆண்டில் பிரதமர் மோடியின் கிரீஸ் பயணத்தின் போது இந்தியா-கிரீஸ் உறவுகள் 'மூலோபாய கூட்டாண்மைக்கு' உயர்த்தப்பட்டுள்ளது. அவை பகிரப்பட்ட கலாச்சார விழுமியங்கள், பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதற்கான அர்ப்பணிப்பு, பாதுகாப்பு மற்றும் தற்காப்பு, கப்பல் போக்குவரத்து, கடல்சார் துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளில் ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. மேலும் இரு நாடுகளும் பல்வேறு பலதரப்பு மன்றங்களில் நெருக்கமாக ஒத்துழைத்து வருகின்றன.

4. இந்த பயணம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு கிரீஸிலிருந்து இந்தியாவிற்கு வரும் முதல் இருதரப்பு மாநிலத் தலைவர்/அரசு அளவிலான பயணமாகும். மேலும் கிரீஸ் பிரதமரின் கடைசி இந்தியப் பயணம் 2008 ஆம் ஆண்டில் நடந்தது. பிரதமர் திரு. நரேந்திர மோடி

அவர்கள் 2023 ஆகஸ்ட் 25 அன்று ஏதென்ஸுக்கு பயணம் செய்தார். கிரீஸ் பிரதமர் மிசோடாகிஸின் இந்த பயணம் இந்தியாவிற்கும் கிரீஸுக்கும் இடையிலான மூலோபாய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் என்றும், ஆழப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**புது தில்லி**
**பிப்ரவரி 17, 2024**